## கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

## O.S.No.110/2010

20.07.2026

பி.வா.சா.2 மீனாட்சி சுந்தரம்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி மற்றும் பிரதிவாதிகளை எனக்கு தெரியும். 2ம் பிரதிவாதியின் கணவர் குடும்பத்தைப் பற்றி எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் சொத்தை வாங்கும்போதுதான் 2016ல் தெரியும். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள பிரதிவாதிகளுக்கிடையே ஆவணங்கள் ஏற்படுத்திய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 2ம் பிரதிவாதியின் கணவர் சக்திவேல் வாதியுடன் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திய விபரம் எனக்கு தெரியாது. அந்த கிரைய உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு 2ம் பிரதிவாதியின் கணவர் சக்திவேல் வழக்கறிஞர் மூலம் பதிலறிவிப்பு கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. 5ம் பிரதிவாதி கிரையப் பத்திரம் எழுதி வாங்கிய சமயம் தாவா வழக்கு நிலுவையில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. 2,3,4 பிரதிவாதிகள் வழக்கு பற்றிய விபரத்தை என்னிடம் கூறவில்லை. வாதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்றால் சரிதான். அவரை எனக்கு நேரில் தெரியும். நான் விவசாயம் செய்கிறேன். நான் நிலம் வாங்கி, விற்கும் தரகர் தொழில் செய்கிறேனா என்றால் விவசாயமும் செய்கிறேன். நான் ரவிக்கு சொத்தை வாங்கிக் கொடுத்துள்ளேன். அவரை எனக்கு 10, 15 வருடங்களாகத் தெரியும். அவர் சோழவந்தானைச் சேர்ந்தவர். 4ம் பிரதிவாதி ரவி சோழவந்தான் ஊரைச் சேர்ந்தவர். சிவகிரிப்பட்டி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் மாரியப்பன் என்பவரின் உறவினதான் மேற்படி ரவி என்றால் சரிதான். வில்லங்கச் சொத்தை வாங்குவதுதான் ரவியின் தொழில் என்றால் சரியல்ல.

3. தாவாச் சொத்து சம்பந்தமாக இந்த வழக்கு நிலுவையில் இருந்த விபரம் எனக்கும், மாரியப்பனுக்கும், ரவிக்கும் தெரியும் என்றால் சரியல்ல. வாதியை மோசடி செய்யவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்தான் 5ம் பிரதிவாதிக்கு 2, 3, 4 பிரதிவாதிகள் கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தைப் பொறுத்து ஜப்தி உத்தரவு ஏதாவது இருந்ததா என்றால் பிரதிவாதிகளின் மொத்தச் சொத்துக்கும் இருந்தது. தாவாச்சொத்து குறித்து எவ்வித ஜப்தி உத்தரவும் கிடையாது என்றும், வாதியை மோசடி செய்யவேண்டும் என்பதற்காக தாவாச்சொத்தை 5ம் பிரதிவாதிக்கு வழக்கு நிலுவையில் உள்ள விபரம் தெரிந்தும் கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவாச்சொத்து பழனி சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் வரும்போது எதற்காக ஒட்டன்சத்திரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் ஒட்டன்சத்திரம், வடகாடு பகுதியில் ஒரு சொத்து இருந்ததால் ஒட்டன்சத்திரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

4. பெரும்பான்மையான சொத்துக்கள் பழனி சார்பதிவாளர் அலுவலக எல்லையில் இருக்கும்போது, ஏன் ஒட்டன்சத்திரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் ஒட்டன்சத்திரம் பகுதியில் ஒரு சொத்து இருந்ததால் ஒட்டன்சத்திரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. நான் 5ம் பிரதிவாதியிடம் கமிசன் வாங்கிக்கொண்டு சொத்தை பதிவு செய்து கொடுத்தால் 5ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> :- இல்லை.**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

RAJA B — Digitally signed by RAJA B Date: 2026.07.20 16:51:40 +0530

Additional Sub Judge,
Palani.